முதன்மை மாவட்ட நீதிமன்றம், சிவகங்கை.

முன்னிலை: **திருமதி.K.அறிவொளி,** M.A., M.L.,

முதன்மை மாவட்ட நீதிபதி, சிவகங்கை.

2026-ம் ஆண்டு ஆகஸ்ட் திங்கள் 04-ம் நாள் செவ்வாய் கிழமை

<u>இடைநிலை மனு எண்.2/2025 இன் முதலேற்பு வழக்கு எண்.112/2025</u>

* * * * *

ஜெயக்குமார் ..மனுதாரர்/வாதி

//எதிர்//

இந்திராகாந்தி ..எதிர்மனுதாரர்/பிரதிவாதி

இம்மனு இந்நீதிமன்றத்தில் 17.07.2026-ம் தேதி என் முன்னர் இறுதி விசாரணைக்கு வந்தபோது மனுதாரர்/வாதி தரப்பில் வழக்கறிஞர்கள் திருவாளர்கள் M.இராஜாஅமுதன், S.சதீஸ்குமார் மற்றும் B.கார்த்திக் ஆகியோர் ஆஜராகியும், எதிர்மனுதாரர்/பிரதிவாதி அழைத்தும் ஆஜர் இல்லாததால் ஒருதலைபட்சமாக்கப்பட்டும், மனுதாரர் தரப்பு வாதுரையை கேட்டும், ஆவணங்களைப் பரிசீலனை செய்தும், இதுநாள்வரை இந்நீதிமன்றப் பரிசீலனையில் இருந்து இன்று நீதிமன்றம் வழங்கும்

<u>உ த் த ர வு</u>

மனுதாரர்/வாதியிடம் பிரதிவாதி பெற்ற கடனுக்கு செலுத்த வேண்டிய தொகைக்காக எதிர்மனுதாரர்/பிரதிவாதி ரூ.26,75,200/-க்கு உரிய செக்யூரிட்டி கொடுக்க உத்தரவிட்டும், தவறும் பட்சத்தில் மனுச் சொத்தினை தீர்ப்பிற்கு முன் ஜப்தி செய்யக் கோரியும் உரிமையியல் விசாரணை முறைச் சட்டம் கட்டளை 38 விதி 5 மற்றும் பிரிவு 151-ன் கீழ் மனுதாரர்/வாதி இம்மனுவை தாக்கல் செய்துள்ளார்.

KANNAYEERAM ARIVOLI
Digitally signed by KANNAYEERAM ARIVOLI
Date: 2026.08.04 18:00:30 +0530

04.08.2026 முதன்மை மாவட்ட நீதிபதி, சிவகங்கை

2) <u>மனுதாரர்/வாதி தரப்பில் தாக்கல் செய்துள்ள மனுவின் சுருக்கம்:-</u>

மனுதாரர்/வாதியிடம், எதிர்மனுதாரர்/பிரதிவாதி தனது அவசர நிமித்தம் குடும்பச் செலவுக்காகவும், அவசர தேவைக்காகவும் பணம் ரூ.16,00,000/- கடனாக வேண்டுமென்றும், விரைவில் செலுத்தி விடுவதாக ஒப்புக்கொண்டு கடந்த 21.08.2022-ம் தேதியன்று மேற்படி மனுதாரர்/வாதியிடம், எதிர்மனுதாரர்/பிரதிவாதி ரொக்கமாக ரூ.16,00,000/- கடன் பெற்றுள்ளதாகவும், மேற்படி கடனுக்கு ஆதரவாக எதிர்மனுதாரர்/பிரதிவாதி, மனுதாரர்/வாதிக்கு சாட்சிகள் முன்னிலையில் 21.08.2022 ஒரு பிராமிசரி நோட்டு எழுதிக் கொடுத்துள்ளதாகவும், மேற்படி கடனுக்கு இதுநாள்வரை அசல், வட்டி பணம் எதுவும் செலுத்தவில்லை என்றும், இந்நிலையில் எதிர்மனுதாரர்/பிரதிவாதிக்கு மனுவில் கண்ட சொத்து 21.06.2011-ம் தேதிய ஆவண எண்.1542/2011-ன் மூலம் தனித்த கிரையப் பாத்தியமான சொத்து என்றும், மேற்படி சொத்தினை மனுதாரர்/வாதிக்கு தெரியாமல் பிறத்தியில் விற்பனை செய்ய முயற்சி செய்து வருவதாகவும், மனுவில் கண்ட சொத்தினை எதிர்மனுதாரர்/பிரதிவாதி விற்பனை செய்யும் பட்சத்தில் மனுதாரர்/வாதிக்கு ஈடு செய்ய இயலாத கஷ்ட நஷ்டம் ஏற்படக்கூடும் என்றும், எனவே மனுதாரர்/வாதியிடம் பிரதிவாதி பெற்ற கடனுக்கு செலுத்த வேண்டிய தொகைக்காக எதிர்மனுதாரர்/பிரதிவாதி ரூ.26,75,200/-க்கு உரிய செக்யூரிட்டி கொடுக்க உத்தரவிட்டும், தவறும் பட்சத்தில் மனுச் சொத்தினை தீர்ப்பிற்கு முன் ஜப்தி செய்யக் கோரியும் மனுதாரரால் இம்மனு தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

**4)** இம்மனுவில் தீர்மானிக்கப்பட வேண்டிய பிரச்சனை யாதெனில் மனுவில் கோரியுள்ள பரிகாரம் மனுதாரர்/வாதிக்கு கிடைக்கத்தக்கதா? இல்லையா?

KANNAYEERAM ARIVOLI
Digitally signed by KANNAYEERAM ARIVOLI
Date: 2026.08.04 18:00:40 +0530

04.08.2026 முதன்மை மாவட்ட நீதிபதி, சிவகங்கை

என்பதே ஆகும்.

**5)** மனுதாரர் தரப்பு வாதம் கேட்கப்பட்டது. ஆவணங்கள் பரிசீலிக்கப்பட்டன. அசல் வழக்கானது மனுதாரர்/வாதிக்கு செலுத்த வேண்டிய அசல், வட்டி தொகையினை எதிர்மனுதாரர்/பிரதிவாதி செலுத்தாத காரணத்தினால் மேற்படி தொகையினை வரப்பெற மனுதாரர்/வாதியால் தாக்கல் செய்யப்பட்டுள்ளது. எதிர்மனுதாரர், மனுதாரரிடம் புரோநோட்டின் பேரில் ரூ.16,00,000/- கடன் பெற்றிருப்பது மனுதாரர் தரப்பில் தாக்கல் செய்யப்பட்டுள்ள பிராமிசரி நோட்டு மூலம் தெரிய வருகிறது. மேலும் மனுதாரர் தரப்பில் மனுவில் கண்ட சொத்துக்கள் எதிர்மனுதாரர்/பிரதிவாதிக்கு பாத்தியப்பட்டது என்பதற்கு செட்டில்மெண்ட் பத்திரம் ஆவணம் எண்.1542/2011 மற்றும் வில்லங்கச்சான்றின் நகல்கள் தாக்கல் செய்யப்பட்டுள்ளன. மேலும் எதிர்மனுதாரர்/பிரதிவாதிக்கு அழைப்பாணை சார்பு செய்யப்படாத நிலையில், கட்டளை 5 விதி 20-ன் கீழ் எதிர்மனுதாரர்/பிரதிவாதிக்கு மாற்றுமுறையான தினசரி நாளிதழ் விளம்பரம் மூலம் சார்பு செய்யப்பட்டு அவர் நீதிமன்றத்தில் அழைத்தும் ஆஜராகாததால் தோன்றாத் தரப்பினராக்கப்பட்டுள்ளார். இந்நிலையில் ஆவணங்களை பரிசீலனை செய்யும்போது எதிர்மனுதாரர்/பிரதிவாதி, மனுதாரர்/வாதியிடம் ரூ.16,00,000/- கடன் பெற்றிருப்பது தெரிய வருகிறது. இருப்பினும் வில்லங்கச் சான்றிதழை பரிசீலனை செய்யும்போது மேற்படி எதிர்மனுதாரர்/பிரதிவாதி 12.04.2024 அன்று அறிவழகன் மற்றும் அபினேஷ் ஆகியோர்களுக்கு மனுச் சொத்தை ஏற்பாடு செட்டில்மெண்ட் ஆவணம் ஏற்படுத்திக் கொடுத்துள்ளார் என்பது தெரிய வருகிறது. மேலும் மேற்படி அறிவழகன் மற்றும் அபினேஷ் ஆகியோர்கள் இம்மனுவில் ஒரு தரப்பினர்களாக இல்லாத

KANNAYEERAM ARIVOLI
Digitally signed by KANNAYEERAM ARIVOLI
Date: 2026.08.04 18:00:48 +0530

நிலையிலும், இம்மனுவில் எதிர்மனுதாரர்/பிரதிவாதிக்கு அழைப்பாணை சார்பு செய்யப்படாத நிலையில், கட்டளை 5 விதி 20-ன் கீழ் எதிர்மனுதாரர்/பிரதிவாதிக்கு மாற்றுமுறையான தினசரி நாளிதழ் விளம்பரம் மூலம் சார்பு செய்யப்பட்டு அவர் நீதிமன்றத்தில் அழைத்தும் ஆஜராகாததால் தோன்றாத் தரப்பினராக்கப்பட்டுள்ள நிலையிலும், அசல் வழக்கில் மனுதாரர்/வாதி தரப்பில் வா.சா.1 மற்றும் வா.சா.2 சாட்சிகள் விசாரிக்கப்பட்டு மற்றும் ஆவணங்கள் குறியீடு செய்யப்பட்டு இன்று அசல் வழக்கானது வாதி தரப்பில் ஒருதலைபட்ச வாதுரைக்காக வாய்தா ஏற்பட்டுள்ள நிலையிலும், மனுதாரர்/வாதி தரப்பில் மனுச் சொத்தை எதிர்மனுதாரர்/பிரதிவாதி உடனடியாக விற்பனை செய்யப் போவதாக மனுவில் குறிப்பிட்டுள்ள நிலையில் அதற்கு ஆதரவாக எவ்விதமான ஆவணங்களும் மேற்படி மனுதாரர்/வாதி தரப்பில் முன்னிலைப்படுத்தப்படாத நிலையிலும், தீர்ப்புக்கு முன் ஜப்தி செய்வது என்பது வேறு வழியில்லாத மிகவும் அரிதான சமயங்களில் மட்டும் செய்யப்பட வேண்டுமென்ற மாண்புமிகு உச்ச நீதிமன்ற தீர்ப்பின் அடிப்படையிலும், மனுதாரர் தரப்பில் தாக்கல் செய்யப்பட்டுள்ள ஆவணங்களின் அடிப்படையிலும் இம்மனுவினை தள்ளுபடி செய்து உத்தரவிடுவதே மனு பொருண்மைகளின்பேரிலும், நீதியின்பாலும் சரியாக இருக்கும் என இந்நீதிமன்றம் கருதுகிறது.

***முடிவாக,*** இம்மனு தள்ளுபடி செய்து உத்தரவிடப்படுகிறது. செலவு தொகை இல்லை.

இந்த உத்தரவு என்னால் சுருக்கெழுத்து தட்டச்சருக்கு நேரடியாக சொல்லப்பட்டு, அவரால் தட்டச்சு செய்யப்பட்டு, பின்பு என்னால்

KANNAYEERAM ARIVOLI

Digitally signed by KANNAYEERAM ARIVOLI
Date: 2026.08.04 +8:00:50 +0530

04.08.2026

முதன்மை மாவட்ட நீதிபதி, சிவகங்கை

சரிபார்க்கப்பட்டு, இன்று 2026-ம் ஆண்டு ஆகஸ்ட் திங்கள் 04-ம் நாள் திறந்த நீதிமன்றத்தில் அவையறிய பகரப்பட்டது.

KANNAYEERAM ARIVOLI
Digitally signed by KANNAYEERAM ARIVOLI
Date: 2026.08.04 18:01:04 +0530

முதன்மை மாவட்ட நீதிபதி,
சிவகங்கை.

**<u>மனுதாரர் தரப்பு சாட்சி மற்றும் சான்றாவணங்கள்</u> :-** இல்லை

KANNAYEERAM ARIVOLI
Digitally signed by KANNAYEERAM ARIVOLI
Date: 2026.08.04 18:01:11 +0530

முதன்மை மாவட்ட நீதிபதி,
சிவகங்கை.